Stanley Hospital, Madras

* 628 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the sanctioned strength of nurse-pupils in the Stanley Hospital, Madras; and

(*b*) the number of nurse-pupils who were given training in 1958 in that hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 184, of which 77 are permanent and 107 temporary.

(*b*) 184.

SRI M. JAGANNATHAN : May I know whether all these 184 pupils who were given training in 1958 have been provided with employment?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot straightaway say that. I presume, they should have got employment. I cannot say definitely.

Straw Board Factory

* 629 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is a proposal to start a Straw Board Factory in Ootacamund;

(*b*) whether the proposal has been finalised; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government have no proposals to start Straw Board factories.

(*b*) & (*c*) Do not arise.

SRI N. K. PALANISAMI : தனியார் துறையில் இதை ஏற்படுத்துவதற்கு யாராவது சர்க்காரை அணுகினார்களா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒருவரும் வரவில்லை. இன்னும் 6,000 டன் உற்பத்தி செய்தால் நமக்கு மார்கெட் இருக்கிறது. நம் நாட்டில் தேவைக்கு குறைவாகத்தான் இப்பொழுது உற்பத்தி பாகிக் கொண்டிருக்கிறது. தனியார் துறையில் யாராவது முன் வந்தால் சர்க்கார் உதவி செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, if private initiative is forthcoming, what are the various kinds of aids which the Government would give, not only technical, but also economic ?

THE HON SRI R. VENKATARAMAN : I think it may be left to the private industrialists to apply to Government.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த அட்டைகள் செய்வதற்குரிய வாழைச் சரகுகள், வைக்கோல், தண்ணீர் இம்மூன்றும் சாதாரணமாக கிடைக்கக்கூடிய இடமான ஆடுதுரையில் அல்லது இந்த மூன்று

6th March 1959]

ஜில்லாக்கள் சந்திக்கும் லோயர் அணைக்கட்டில் இந்த அட்டைத் தொழிலை சர்க்கார் ஆரம்பிக்குமா அல்லது தனியார் முன்வந்தால் அவர்களுக்கு போதிய உதவி அளிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு தொழில் ஆரம்பிப்பதற்கு மூலப் பொருள்கள் மாத்திரம் போதாது. (Entrepreneur ability) தொழில் அமைக்கக் கூடிய ஒரு திறமை வேண்டும். அது குறைவாக இருப்பதால் தான் பல இடங்களில் தொழில்கள் ஆரம்பிக்க முடியவில்லை. தஞ்சையில் யாராவது முன்வந்து அப்படி இத்தொழில் நடத்த முன்வந்தால் சர்க்கார் உதவி செய்யும். அதுவும் தஞ்சையில் இதற்கு வேண்டிய வசதிகள் இருக் கின்றன என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்தத் தொழில் விஷயமாக " பாரின் எக்சேஞ் கொஸ்டின் " ஏதாவது ஈடுபட்டிருக்கிறதா ? (Laughter)

THE HON. SRI R. VENKATARAMAN : Well, Sir. I thank the hon. Member for his question. Even if foreign exchange is required for the purpose, Government will be willing to do that.

SRI A. GOVINDASAMY : இந்தத் தொழிலை நடத்துவதற்கு திறமை வேண்டும் என்று சொன்னார்கள். திறமையான தொழில் அமைச்சர் இருக்கும்பொழுது, ஏன் அரசாங்கம் இதை எடுத்து நடத்தக் கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேண்டுமானால் நான் இந்த வேலையை விட்டுவிட்டு ஆரம்பிக்கவேண்டும். (சிரிப்பு.)

SRI A. VEDARATHNAM : இப்பொழுது அட்டை செய்யும் தொழில் எங்கே நடைபெறுகின்றது ? அதற்கு அரசாங்கம் அளித்து வருகின்ற உதவி என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஹாண்ட்மேட் பேபர்", அட்டைகள் செய்யும் தொழில் மதுரை, ராயபுரம் போன்ற இடங்களில் காடேஜ் இண்டஸ்டிரீஸ் என்ற முறையில் நடத்தப்பட்டு வருகிறது. நான் சொல்லுவது இதை ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் என்ற முறையில் இன்னும் விஸ்தாரமாகச் செய்யலாம் என்பது தான்.

SRI A. A. RASHEED : அட்டைகளை உற்பத்தி செய்வதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ? (சிரிப்பு.)

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த அட்டைகள் என்று புரியவில்லை. லீச்சஸா ? (சிரிப்பு.)

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959-60—*cont.*

MR. SPEAKER : இப்பொழுது பட்ஜெட்டின் மீது தொடர்ந்து விவாதம் நடக்கும். ஒப்பந்தத்தின் பிரகாரம் கனம் சின்னதுரை அவர்கள் இன்று பேசுவார்கள். அவர்களுக்கு ½ மணி நேரம் ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

*SRI P. S CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற. . .

MR. SPEAKER : இன்று மந்திரி ஒருவரும் பேசமாட்டார். அங்கத்தினர்கள் தான் பேசுவார்கள். நிறைய அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று விரும்பினால், சபை இன்று மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரையில் உட்காரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.